Registered

# சன்மார்க்கபோதினி.

SANMARKAPOTHINI.

பத்திரவிலைவிகிதம்

வருஷமொன்றுக்கு தபாற்செலவு.
இலங்கைக்குசதம் ௫௦
இந்தியாவுக்குசதம் ௫௦
பிறதேசங்களுக்கு ௭௫

ஒன்றுவிட்டொருசனிக்கிழமைகளிற்பிரசுரஞ்செய்யப்படும்.

சாதுசங்கஞ் சன்மார்க்க சாதனம்.

விளம்பரவிலைவிகிதம்

வரி ஒன்றுக்குச்சதம் ௧௦
௧௦ க்குமேல்வரி ௧-க்கு௮
௩௦ க்குமேல்..........௬
இணைப்பிரசுரமொவ்வொன்றிற்கும் ௩-ல் ஒன்று

XXVII } JAFENA 18th MARCH 1911 { No 6

உ௭ ம் புத்தகம் } யாழ்ப்பாணம் ௧௯௧௧ ம் ஹூ பங்குனி மீ ௧௮ உ சனிக்கிழமை. { சங்கியை ௬

## இலங்கையில்முதன்மையானகல்வியும் அரசாட்சியாரின் நோக்கமும்.

அங்கிலேய கொடியின்கீழ் மங்காப்பிரபையுடன் இலங்கிவருகின்ற இரு சர்வகலாசாலைகள் "ஒக்ஸ்வோட்" "எனவும் கேம்பிறிஜ்" எனவும் நாமதேயம்பூண்டவைகளே. இவைகளின் விசேஷத்திற்குத் காரணம் லத்தீன், கிரேக்கு, பிரான்ச ஆதியபாஷைகளிலேயே அதிக கவனஞ்செலுத்திவருவதே.

லிவர்பூல், மான்சிஸ்றர், லீட்ஸ், ஷெவீல்ட் ஆதிய இடங்களின் சர்வகலாசாலைகளில் லத்தினைக் கைநெகிழ்ந்ததால் சொற்பபேரே பிரவேசப்பரீட்சையில் சித்தியெய்தியருகிறார்கள், புருஷியா சர்வகலாசாலைகளில் லத்தீனும் கிரேக்கும் படிப்பிக்கக் கட்டுப்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பிரான்சிலும் இப்படியே. அவுஸதிரியாவின் கல்லூரிகளிலும் இப்பூர்வகிரந்தங்கள் கற்பிக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டுவருகின்றது, சுவிற்சலான்டும் இவைகளை ஆதரித்தே வருகின்றது.

அங்கிலேயபாஷையில் முதன்மைபெறவிரும்பினால் லத்தீனே கற்கவேண்டும். லத்தீனில்லாது கலைஞானமாவது இதிகாசமாவது தத்துவ சாஸ்திரமாவது ... கற்கவியலாது.

கிரேக்கு இராசாங்க ... முறையிலும், ரோமைஸ்பாட்டா முதலியவைகளின் இதிகாசத்திலும், தருமசாஸ்திரம் கருமநிர்வாகம் எனும்கிருத்தியங்களிலும் கீர்த்திவாய்ந்ததே.

அங்கிலேய கல்விச்சங்கத்தார் பிரான்சுப்பாஷையை மேன்நிலைக்குக் கொண்டுவருகிறார்கள். உதாரணமாக மான்சிஸ்றரின் நகரவிசாரணைக்குரிய பாடசாலையில் பிரான்சுதேசத்தில் அநேககாட்களிருந்து விசேஷமாய்க் கற்றுத்தேறிய உபாத்திமார்களினால் 1000 மாணவர் பிரான்சியபாஷை கற்பிக்கப்படுகிறார்கள். சங்கத்தார் தங்களுடைய உபாத்திமார் பிரான்சில் அதிககாலிருக்கும்படி செய்வதற்காக பிரான்சிய பாடசாலைகளிலிருக்கும் உபாத்திமாரைத் தங்களிடமழைத்து, அவர்களுக்குப் பதிலாய்த் தங்கள் உபாத்திமாரைப் பிரான்சுக்கு அனுப்பியும் உபாயமாய் அப்பாஷையைப் பூரணப்படுத்துகிறார்கள், லண்டன் B.S.C. என்னுஞ் சோதனைக்குப் பிரான்சியபாஷையும் ஒன்றாய்ச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இவ்விதமே ஐரோப்பாவில் இப்பூர்வகிரந்தங்களை முன்னிலைக்குக்கொண்டுவரத் துரிதப்படுகையில் "தனக்கழுகுமொட்டை பிறர்க்கழுகுகொண்டை" என்றாற்போல இலங்கையிலே இவைகளை முற்றாய்க்களைந்துவிட அரசாட்சியார் எத்தனஞ்செய்கிறார்கள்போலே தோற்றுகிறது. இராசாங்கல்லூரியிலேயே இவைகளை முதன்முதல் நிறுத்தி இவைகளுக்குப்பதிலாய்க் கைத்தொழில் வியாபாரம் ஆதியவைகளுக்குரிய கல்விகளையூட்ட எத்தனிக்கிறார்கள். மற்றுங் கல்லூரிகளிலும் இந்நோய் தொற்றுமென்று அஞ்சப்படுகிறது. இப்படிநேர்ந்தால் இனிமேல் ஒருவரும் "சிவில்சேவிஸ்" சோதனைக்குச்செல்லாது தடுத்தற்கு ஓர் உபாயமென்று எண்ணப்படுகிறது. இந்தியாவிலும் அனேக கலாசாலைகள் உண்டாயினும் இவைகளில் இக்கிரந்தங்கள் விலக்கப்பட்டபடியால் மதிப்புக்குறைந்துவருகின்றன. இங்கிலாந்தின் ஓர் சர்வகலாசாலையில் இரு இந்தியரே ஒரேமுறையில் கல்விபயிலலாமென ஓர் ஏற்பாடுமுண்டு. இவ்விதமே இந்தியரின் கல்விமதிப்புக் குறைக்கப்பட்டுவருகின்றது.

சென்ற மாசிமீ 6உ இலங்கைக் கல்விச்சங்கம் தேசாதிபதியவர்களுக்கு ஓர் நிருபம்விடுத்தது. அதில் கல்விச்சங்கத்தாருடன் யோசித்தே சகல கல்விப்பிரமாணங்களும் ஏற்படுத்தவேண்டுமென்றும், எல்லாக்கலாசாலைகளிலும் ஒரேவிதக்கல்விக்காவும் சகல உத்தியோகங்களுக்கும் ஒரேவித பிரவேசப்பரீட்சை செய்யவும் எத்தனிக்கவேண்டுமென்றுங் கேட்கப்பட்டது. இதற்குத் தேசாதிபதியவர்கள் முன் கேட்கப்பட்ட அனேககாரியங்கள் இப்போ அங்கிலேய கல்விச்சங்கத்தில் யோசிக்கப்படுகிறதென்றும் இப்போ புதிய ஏற்பாடுகள்செய்ய இயலாதென்றும் விடைபகர்ந்தார்.

சென்றவருடம் ஆடிமீ 6உ மேற்படிசங்கம் கல்வித்திருத்தத்துக்குக் கல்விச்சங்கத்தாரும் சுதந்தரராய்வருவது முறையோவென்று யோசிக்க ஓர் விசாரணைச்சங்கம் ஏற்படுத்தவேண்டுமென்று தேசாதிபதியவர்களுக்கு விண்ணப்பஞ் செய்தபோது அவர் இக்கேள்விக்கு மறுதலித்துவிட்டார். இம்முறை இந்தியாவில் கல்வித்திருத்தம்நடந்தேறியபோது லோட் கேர்சன் விசாரணைச்சங்கம் கூட்டினாரென்று தேசாதிபதியவர்களுக்குக் காட்டியிருக்கிறார்கள். என்றாலும் இம்முறையும் நிச்சயமற்றவிடையே கொடுத்தார்.

சகலசாதியாருள்ளும் தேசாபிமானம் மிகப்பாராட்டப்பட்டுவருகின்றது. தங்கள் தங்கள் தேசங்களுக்கு யாதோர் விக்கினம் நேரிட்டால் அதை நிவாரணைசெய்வதும் அங்குள்ளாரின் குற்றங்குறைகளைக் களைந்தெடுப்பதுந்தேசாபிமானமே. தங்கடேய அதிபதிகளைக் கண்ணியப்படுத்துவதும் ஆதரவற்றவர்களை அணைப்பதும் தேசாபிமானமே. அவ்வவ்வூரில் புண்ணியங்களை வளரச்செய்வதும் கல்வி காசாலைகளை விருத்திசெய்வதும் தேசாபிமானமே. ஓர்தேசத்தான் மற்றத்தேசவாதிகளை நிந்திப்பதால் தேசாபிமானியென்று எண்ணப்படுவானோ? ஓர்சாதியார் வேறோர்சாதியாரை ஆண்டுவருகையில் ஆளப்படுபவர்களின் குறை இக்கட்டுகளை நீக்கியும் உதவிசகாயங்களைப்புரிந்தும் கல்வித்திறனுடையராக்கியும் வருவார்களானால் அம்மகிமை ஆண்டுவருஞ்சாதியாருக்குடையதே. ஏனெனில் ஓர்குமாரனின் வீரச்செயல் அவன் பிதாவையும், ஓர்மாணாக்கனின் புத்திவல்லமை அவனது கல்லூரியையும், ஓர் போர்வீரனின் வெற்றிவீரம் அவனது இராச்சியத்தையும் மகிமைப்படுத்துகிறது. இவ்விதமே புறசாதியாரான பிரசைகளுக்கு நன்மை செய்வதும் தேசாபிமானமே.

இவ்வித மேலானநோக்கத்தை ஒழித்துப் புறசாதியாருக்குநன்மைசெய்தால் தங்களுக்குத் தின்மைவிளையுமென்றும் விசேஷ கல்விகளைப் படிப்பித்தால் தங்கள்சங்கைக்குப் பங்கம்விளைக்கக்கூடிய அறிவினர்களாய்ப் போவார்களென்றும் ஆண்டுவருஞ்சாதியார் எண்ணுதல் புத்தியோ? இருட்டறைக்குள் வெளிச்சமேற்றினால் அதிக இருட்டாயிருக்குமென்றும் நீதிவிசாரணை ஸ்தலங்களில் எதிரிபக்கத்துக்கு நியாயதுரந்தரரேற்பட்டால் நீதவானுக்கு நட்டமென்றும், சத்துராதிகள் அனியாயமாய்ப் படையெடுத்து வரும்பொழுது யுத்தக்களத்தில் எதிர்செல்லாதுவிட்டால் அதிக சமாதானம் விளையுமென்றும் நினைக்கும் மூடர்களுமுண்டோ?

இந்தியாவில் கலகம் நிகழ்ந்ததெல்லாம் சரியான சமயகல்வி யில்லாமையே, உலககல்வி மாத்திரம்போதாது, கடவுட்பத்தியூட்டும் கல்வியே அத்தியாவசியகமானது.

## சன்னிவதாசுரத்தில் எண்ணெய்.

மஞ்சார்குழலாயோரொன்று வாங்கிக்கழஞ்சாகக்கொண்டங், கெஞ்சாதிருநாழிப்புனலிவிட்டே எட்டொன்றாக்கப்பின், பஞ்சாரித்துப்புத்தேன்திற் பவிமேற்பொடியாய்ப்பருகுடல், நஞ்சாகியெரியுஞ்சுரமிவைதான் நன்னீரெனவேகுளிர்ந்திடுமே.

குளிருங்காக்கணங்கொவ்வைகொச்சி குலப்பேய்ப்பருத்திசமூலமற்ற, வெளிறும்வேலிப்பருத்தியுடன் மிக்கவாதமடக்கிஇலை, ஒளிருஞ்சாறொன்றொருநாழி யுள்ளேகரைக்குமருக்கரத்தை, தெளியுஞ்சிவனார்வேம்புடனே தேவதாரஞ்செவ்வியமே.

## பதார்த்தசாரம்.

### துல்கமாரம், Dulcamara.

இது மத்திய ஆசியாவிலுண்டாகும் ஓர் கொடியின் கிளை. மயக்கங்கொடுக்கும். மூத்திரத்தையும் வெயர்வையையும் அதிகரிப்பிக்கும். சொறிவு, செதிற்கரப்பன் தீரும். முகத்தையும் கையையுஞ் செங்கருமையாக்கும். பத்துப்பங்கு சுடுநீரில் இதன்பொடி ஒருபங்கிட்டு ஊறவிட்டு வடித்து இரண்டொரு அவுன்சு உள்ளேகொடுக்கலாம். செதிற்கரப்பனுக்கு மேற்பூச்சாயும் வழங்கப்படும்.

### துவரை, Cajanus Incidus.

இதன் பருப்பால் பித்தம், சேடம், மூலம், சீதம், விஷம் தீரும், பலமுண்டாம்.

### யோசேவாஸ்முனிவர் சரித்திரம்.

"சம்மனசுச்சுவாமியென"மூன்னுள்ளோரால் அழைக்கப்பட்டவரும் ஒல்லாந்தரின் கொடுக்கடகாலத்தில் ஆன்மாக்கள்மீதுள்ள அளவுகடந்த அன்பினுல் ஒல்லாந்தரின் தாசரின் உடையையணிந்து இலங்கைக்குவந்து நமது யாழ்ப்பாணத்திலும் தங்கிப் பிச்சையெடுத்தபழஞ்சோற்றினுல் சீவித்துக் கடினவியாதிப்பட்டுச் சனங்களால் காட்டில் தூக்கியெறியப்பட்டும் அற்புதவிதமாய்ப்பிழைத்து அனேக நன்மைகளைச்செய்து சத்துராதிகளுக்குத்தப்பிக் கண்டிஅரசனின் ஆணைக்கீழ் சேர்ந்திருந்தவரும் அங்கும் கடினதொல்லைகளையனுபவித்நும் தேவகிருபையால் மகிமையடைந்திருந்து இலங்கையின் பலபாகங்களுக்குஞ் சுற்றித்திரிந்து கத்தோலிக்க சபைமுற்றும் அழிந்துபோகாமல் காத்தவருமான இவரின் சரித்திரத்தை முற்காலத்தில் வண. கவிரியேல்பச்சேக்குச்சுவாமியவர்களால் எழுதப்பட்டுக் கரலிகிதமாய் இக்காலவரையும் மன்னார்ப்பகுதியிற் காக்கப்பட்டிருந்தது. அதை வண. ஞானப்பிரகாசசுவாமியவர்கள் தேடிஎடுத்து அச்சிடுவித்து வெளிப்படுத்தியிருக்கிறார். இச்சரித்திரத்தை வாசிப்பவர் அக்காலில் அவ்வுத்தமகுரவர்பட்ட பிரயாசைக்கும் கஸ்திவருத்தங்களுக்குமாயுள்வுருகாதிரார். இலங்கையில் அவர் காலடிவையாதிருப்பாராயின் கத்தோலிக்கசபை இங்கே இவ்வளவு செழிப்பாயிராதென்பது நமதபிப்பிராயம். அவ்வுத்தமகுரவரின் 200 ம் வருடக் கொண்டாட்டத்துடனே இந்தச் சரித்திரமும் வெளிப்பட்டது. அனேகருக்கு நற்பிரயோசனமாயிருக்குமென்பது நமது நம்பிக்கை. இதன்விலை சதம் 81. அஞ 13. இதனோர்பிரதியை நமதுபார்வைக்கு அனுப்பிவைத்தவர்க்கு நமதன்பானவந்தனங் கூறுகிறோம். விரும்பினோர் யாழ்ப்பாணம் அர்ச். சூசைமாமுனிவரின் அச்சியந்திரசாலைத் தலைவர்க்கு எழுதிப்பெற்றுக்கொள்க.

---

### விரோதிகிருதுவருஷ வாக்கியபஞ்சாங்கம்.

ஸ்ரீ இரகுநாதையரவர்களால் ஸ்தாபித்த சோதிடப்பிரகாச யந்திரசாலையினின்று அவர் தத்தபுத்திரர் ஸ்ரீ சிவராமலிங்க ஐயரவர்களாலும் அவர் பௌத்திரர் ஸ்ரீ ச. சுப்பிரமணிய ஐயரவர்களாலுங் கணித்துக் கிரமக்தவறுதுபிரசரித்துவரும் பஞ்சாங்கம் வெளியானது. இதில் சுயதேச அக்ஷாம்சம் முதலியவைகளும் சரபிண்டசம்ஸ்காரஞ்செய்த இராசிப்பிரமாணமும் பரோபகாரங்கருதி வெளியிடப்பட்டிருக்கின்றன. முன்வருடங்களிலும் சுத்தமாகவும் விளக்கமாகவும் அச்சிடப்பட்டிருக்கிறது. நம்மூரில்இதுவொன்றே 54 வருடஎல்லையைக்கண்ட புராதனபஞ்சாங்கம். இதனோர்பிரதியை நமதுபார்வைக்கனுப்பிய தயவிற்காக இப்பஞ்சாங்ககர்த்தாக்களுக்கு நன்றி கூறுகிறோம்.

---

### கையொப்ப வரவு.

யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| Joseph Machado Esq. | 3–50 |

செடுந்தீவு

| | |
|---|---|
| Dr, S. Sinnatambyapillai | 3–50 |

கொழும்பு

| | |
|---|---|
| A. Kandiah Esq. | 1–75 |

அச்சுவேலி

| | |
|---|---|
| மெஸ், சி. செல்லையாஉபாத்தியாயர் | 1–25 |

சிலாபத்துறை

| | |
|---|---|
| மூ. கவிரியேல் | 1–75 |

---

## யாழ்ப்பாணம்.

ஊர்ச்சீர்—வெயிலகோரம். புழுக்கம் மிகுதி. காய்ச்சல் சன்னியாதியரோகங்கள்மிகுந. மரணவீதமும் அதிகம்.

---

கேம்பிரிட்ஸலோக்கற்பரீட்சை—கடைசியாய் நடந்தேறிய கேம்பிரிட்ஸ்லோக்கற்பரீட்சைக்கு இலங்கையிலிருந்து சென்றவருள், சீனியர்வ்விசேஷ சித்தியடைந்தோரில் 1ம் வகுப்பில் 6பேரும், 2ம் வகுப்பில் 6 பேரும், 3 ம் வகுப்பில் 15 பேரும், 19 வயசுக்குள் சாதாரணபரீட்சையில் 123 பேரும், 19 வயசுக்குமேல் 75 பேரும், யூனியரில் 16 வயசுக்குட்பட 1 ம் வகுப்பில் 9 பேரும், 2 ம் வகுப்பில் 9 பேரும், 3 ம் வகுப்பில் 8 பேரும், 16 வயசுக்குட்பட்ட சாதாரண பரீட்சையில் 96 பேரும், 16 வயசுக்கு மேற்பட்டோரில் 201 பேரும், பெண்களில் சீனியர்வகுப்பில் 19 வயசுக்குள் விசேஷசித்தியடைந்தோரில் 3 ம் வகுப்பில் 4 பேரும், 19 வயசுக்குட்பட்ட சாதாரணபரீட்சையில் 15 பேரும், 19 வயசுக்கு மேற்பட்டவருள் 4 பேரும், யூனியரில் 1 ம் வகுப்பில் ஒருவரும், 2 ம் வகுப்பில் இருவரும, 3 ம வகுப்பில் ஒருவரும் 16 வயசுக்குட்பட்ட சாதாரண பரீட்சையில் 57 பேரும் சித்திபெய்தினர்.

இவருள் சீனியர்வகுப்பில விசேஷ சித்தியடைந்தோருள் கொழும்பு சென் தோமஸ்கல்லூரியிலிருந்துசென்ற P. சரவணமுத்துவும், யாழ்ப்பாணம் சென் யோன்ஸ்கல்லூரியிலிருந்துசென்ற K. குமாரசாமியும், செட்டித்தெரு இங்கிலீஷபாடசாலையிலிருந்துசென்ற S.S. நவரத்தினமும், யாழ்ப்பாணக்கல்லூரியிலிருந்துசென்ற C.T. இராசரத்தினமும் சுதேசிகளாய்க் காணப்படுகின்றனர். சாதாரணபரீட்சையில் மட்டிக்களப்பு உவெஸ்லியன் மத்தியபாடசாலையிலிருந்துசென்ற P.A. தம்பிப்பிள்ளையும், கொழும்பு செயின் யோசேப் கல்லூரியிலிருந்துசென்ற N கனகநாயகமும், கொழும்பு உவெஸலிக்கல்லூரியிலிருந்துசென்ற H.T. இராமசந்திரனும், லோறன்ஸ் றியுற்றியில்ருந்துசென்ற M. சோமநாதபிள்ளையும, செயின்பெனடிக்ற் இன்ஸ்சித்தியூற்றிலிருந்து சென்ற K. திருச்சிற்றம்பலமும், தோமஸ்கல்லூரியிலிருந்துசென்ற L.F.N. திசைவீரசிங்கமும், T. சரவணமுத்துவும், கண்டி செயின் அந்தோனிஸ்கல்லூரியிலிருந்துசென்ற G.W. புவிமன்னசிங்கியும், திரினித்திக்கல்லூரியிலிருந்துசென்ற W.D.N. செல்வத்துரையும், R.V.N. செல்வத்துரையும், S. சுப்பிரமணியமும், C. S. இராசரத்தினமும, யாழ்ப்பாணம் சென்யோன்ஸ்கல்லூரியிலிருந்துசென்ற G.S. அருட்பிரகாசமும், P. முத்துலிங்கசாமியும், S. சிவப்பிரகாசமும், K. சோதிநாசரத்தினமும், S. சுப்பிரமணியமும், C.N. உன்கிலோவும், S.S. அப்பாபிள்ளையும், A.A. செல்லப்பாவும், P. டேவிற்சின்னையாவும், யோசேப் S. மேதரும், A. பொன்னம்பலமும், E.V. இராசையாவும், S. சுவாமிநாதனும், செயின் பற்றிக் கல்லூரியிலிருந்துசென்ற S.P. அருளப்பாவும், A. ஞானப்பிரகாசமும், J. பொன்னையாவும், S. பென்சமீனும், செட்டித்தெரு இங்கிலீஷ் ஹைஸ்கூலிலிருந்துசென்ற E. ஐயம்பிள்ளையும, வயித்திலிங்கம் நாகலிங்கமும், M. இராமலிங்கமும், M.S. சிவரத்தினமும், M. ஆறுமுகமும், V. தருமலிங்கமும், A. வேலுப்பிள்ளையும், சென்றல் கல்லூரியிலிருந்துசென்ற C.W.A. பீபியும், K. செல்லப்பாவும், J. V. தருமராசாவும், A. சரவணமுத்துவும், K. கதிர்காமுவும், C.M. முத்துத்தம்பியும், K. தம்பையாவும், விக்ரோறியாக்கல்லூரியிலிருந்துசென்ற T. கனகரத்தினமும், A. சம்பந்தமூர்த்தியும், யாழ்ப்பாணக்கல்லூரியிலிருந்துசென்ற E.T. ஹிற்ஸ்கோக்கும், E.T. சரவணமுத்துவும், S.H.D. செல்வமாணிக்கமும், C. அம்பலவாணரும், T. அருமைநாயகமும், W.T.A. ஞக்கும், S. கணபதிப்பிள்ளையும், A. V. குலசிங்கமும, இந்துக்கல்லூரியிலிருந்துசென்ற வயிரமுத்து நாகலிங்கமும், C. தம்பியும், C. மயில்வாகனமும், A. நடராசாவும், C. சுப்பிரமணியமும், பருத்தித்துறை உவெஸலியன் ஹைஸ்கூலிலிருந்துசென்ற V. கார்த்திகேசவும், M. செல்வத்தம்பியும், K. முத்துச்சாமியும், நாஷனல் அக்கடமிலிருந்துசென்ற K. சரவணமுத்துவும், அந்தரங்கத்திற்கற்றுச்சென்ற H.T. சதாசிவமும், N.C. குமாரசாமியும் அரங்கேறிய சுதேசிகளாகக் காணப்படுகிறார்கள்.

யூனியர்வகுப்பில் 16 வயசுக்குட்பட்டவரில் கொழும்பு, சென்பெனடிற்இன்ஸ்சித்தியூத்திலிருந்துசென்ற S.C. மாணிக்கவாசகரும், K. சோமாஸகந்தரும், ரோயல்கல்லூரியிலிருந்துசென்ற P. இராமலிங்கமும், உவெஸலிக்கல்லூரியிலிருந்துசென்ற K.G. சதாசிவம்பிள்ளையும், செயின் யோசேப்கல்லூரியிலிருந்துசென்ற M. துரையப்பாவும், யாழ்ப்பாணத்தில்செயின் ஜோன்ஸ்கல்லூரியிலிருந்துசென்ற J.K. ஆனல்ட்டும் L.R. டான்வோதும், R. குரேசற் தம்பையாவும், A.I. உவின்சிலோவும், சென்றல் கல்லூரியிலிருந்துசென்ற D. ஆசைப்பிள்ளையும், W.R. சண்முகமும், J.A. நல்லையாவும், W.O.A. உலகசேகரமும், V. சின்னத்தம்பியும், C. சிற்றம்பலமும், விக்ரோறியாக் கல்லூரியிலிருந்துசென்ற N. கனகரத்தினமும், R. கந்தையாவும், V. கார்த்திகேசரும், இந்துக்கல்லூரியிலிருந்துசென்ற V. சின்னத்துரையும், A. R. தம்பியும், யாழ்ப்பாணக்கல்லூரியிலிருந்துசென்ற M.K. மாப்பாணரும், J.C. மொரடோசும், A.V. சினலும், செயின் பற்றிக்கல்லூரியிலிருந்துசென்ற S. சந்தியாப்பிள்ளையும், அரங்கேறின சுதேசிகளாய்க்காணப்படுகின்றனர். 16 வயசுக்குமேல் யூனியர்வகுப்பில் மட்டிக்களப்பு உவெசிலியன் சென்றல் பாடசாலையிலிருந்துசென்ற J.E. அழகைக்கோனும், A. D. கனகரத்தினமும், S. துரைராசாவும், சென் மிக்கேல்பாடசாலையிலிருந்துசென்ற C. செல்லப்பிள்ளையும், திரிகோணமலை சென்யோசேப்பாடசாலையிலிருந்துசென்ற A.L. குரோசவும், V. சுப்பிரமணியமும், கொழும்பு சென்பெனடிக் இஸைதியூற்றிலிருந்துசென்ற J.B. எதிர்மன்னசிங்கமும், காலி மகிந்தாக் கல்லூரியிலிருந்துசென்ற J.M. அழகைக்கோனும், திரிசமன்கல்லூரியிலிருந்துசென்ற S. S. தம்பிமுத்துவும, யாழ்ப்பாணம் சென் பற்றிக்கல்லூரியிலிருந்துசென்ற A.J. அழகைக்கோனும், B. அந்தோனிப்பிள்ளையும், R. அப்புத்துரையும், J.A. வஸ்தியாம்பிள்ளையும், V. செல்வரத்தினமும், J. மனுவேற்பிள்ளையும், V. முருகேசுவும், S. முத்தையாவும், J. சிங்கராயரும், M. சின்னத்தம்பியும், V. சிற்றம்பலமும், V. தம்பிராசாவும், விக்ரோறியாக்கல்லூரியிலிருந்துசென்ற K. அம்பிகைவாகரும், S. ஏரம்புவும், E. கந்தையாவும், A. கணபதிப்பிள்ளையும், A. கதிரவேலுவும், T. பரமகுருவும், V. சின்னத்தம்பியும், S. தமபுவும, சென்றல்கல்லூரியிலிருந்துசென்ற K. அம்பலவாணரும், S.P.K.S. பாலசுப்பிரமணியஐயரும், D.S. கஸ்பேசுஹம், S. கார்த்திகேசுவும், T. முத்துத்தம்பியும், S. இராசையாவும், R. வேலுப்பிள்ளையும், R. உதயலிங்கமும், சென் யோன்ஸ்கல்லூரியிலிருந்துசென்ற S.K. அப்பாத்துரையும், S.T. ஐயாத்துரையும், J.T.N. ஹண்டியும், S. கனகலிங்கமும், V. குமாரசாமியும், A. முருகேசுவும், K. முத்தையாவும், K. பீதாம்பரமும், C. இராசையாவும், S. செல்லத்துரையும், A.M. செல்வரத்தினமும், V. சின்னத்துரையும், P. சுந்தரமும், T. விசுவப்பாவும், R. வயித்திலிங்கமும், யாழ்ப்பாணக்கல்லூரியிலிருந்துசென்ற G.S. அருளம்பலமும், A. மாணிக்கமும், J.T. மில்லரும், R. தாமோதரம்பிள்ளையும், N. தியாகராசாவும், இந்துக்கல்லூ...சென்ற S. சின்னத்தம்பியும், செட்டித்தெரு ஹைஸ்கூலிலிருந்துசென்ற S. குமாரசாமியும், K. விசுவலிங்கமும், பருத்தித்துறை உவெஸலியன் ஹைஸ்... சென்ற P. கந்தையாவும், N. இரத்தினவேலும், N. வடிவேலுவும், நாஷனல் அக்கடமிலிருந்துசென்ற T. தியாகராசாவும், அந்தரங்கத்திற் கற்றுச்சென்ற K. ஆறுமுகமும், A. கதிரவேலுவும், A. மயில்வாகனமும், V. பொன்னம்பலமும், T. செல்லத்துரையும் அரங்கேறிய சுதேசிகளாகக் காணப்படுகிறார்கள்.

பெண்களுள் சீனியர்வகுப்பில் சுண்டிக்குழிப் பெண்பாடசாலையிலிருந்துசென்ற M.R. அங்கிற்றனும், V.J.A. சத்துருக்கன்சிங்கியும், 19 வயசுக்குமேற்பட்டோருள் N.B. உவில்லியம்ஸ்சும், யூனியர்வகுப்பில் S.M. செல்லப்பாவும், சுதேசிகளுளரங்கேறினர்.

உவெஸ்லியன் பெண்பாடசாலையிலிருந்து சென்றோருள் யூனியர்வகுப்பில் R.P. ஸ்பென்சரும், L. R. அலக்சான்றரும், E. A. தாமோதரமும், R.N. C. பேரின்பநாயகமும், கன்னியாஸ்திரிமடப் பாடசாலையிலிருந்துசென்றோருள் M.M. இம்மானுவேலும், M E. டினிசும், R.D. கார்த்திகேசவும் அரங்கேறிய சுதேசிகளாகக் காணப்படுகிறார்கள்.

---

யாழ்ப்பாணமேற்றிராணியார்_ மகாகனம். ஹென்றி யூலன் ஆண்டவரவர்கள் இப்பகுதிமீசாமைத் தரிசிக்கவிரும்பி முந்த ஞாறணிக்கும் பிந்தக் கொட்டகப்புலத்துக்குத் தரிசனைகொடுத்து அவ்வப்பகுதிக் கிறீஸதவர்களால் தக்க கௌரவத்துடன் வந்தித்தழைக்கப்பட்டு அனேகரை விசுவாசசத்தியத்திற்றிடப்படுத்தித தக்க பிரசங்கமாரிபொழிந்து பின்னர் பருத்தித்துறையைநோககினர். அங்கு புலோலிப்பகுதிக்குந் தரிசனைகொடுத்துக் கவுரவமாயங்கிகரிககப்பட்டார். அவருடன் சமீபத்தில் கோவைநகர்த் தரிசனைசெய்துதிரும்பியவரும் தற்கால நமது டிஸதிறிக்ரீதிபதியின் உறவினரும் பிராமணகுலத்தவருமான வண. வாஸ்சுவாமியார் ஆங்காங்குசென்று உதவிபுரிந்துவருகிறார்.

---

மரணசங்கதி—"பட்டகாலிலேபடும் கெட்டகுடியேகெடும்" என்றபடி நமது கோப்பாயச் சமாதானநீதிபதி ஸ்ரீ அ. மயில்வாகனத்துரையவர்கள் காலஞ்சென்றதுயரம் மாறுமுன்னரேசிலநாட்களின்முன் அவரதுசிரேஷ்டபுத்திரியும்இருபாலை ஸ்ரீ க. நாகலிங்கத்தின்பிரியபாரியானவரும காலஞ்சென்றார். சென்றகிழமை அவரது சிரேஷ்டபுத்திரன் ஸ்ரீ மாணிக்கமயில்வாகனம் கோப்பாயிலிறக்க, அன்றுதானே அவரின்தாயும் அதாவது மயிலவாகனத்துரையின் பாரியாரும் வண்ணார்பண்ணையிலிறந்தா. விசேஷகுடும்பங்களி லிவ்வித துயர்ச்சம்பவம் அடுத்தடுத்து வருவதற்கு மனத்துயரு மோர் காரணமாயிருக்கலாம். இவர்க்காய்த் துயருறும் அக்குடும்பத்தாருடன் நாமுந் துயரடைகிறோம்.

---

வேறுமோர் மரணசங்கதி— காலஞ்சென்றடக்றர் போல் அவர்களின் புத்திரிகளில் ஒருவரும், காலஞ்சென்ற சலமன் இராசையாவின் பாரியாருமாகிய எலிசா செல்லம்மா சிலதினங்களின்முன் சடுதியிலே தேகவியோகமான செய்தியையறிந்து அவர்க்காய்த்துயருறும் அன்னை, சகோதராதியோருடன் நாமும் மனம்வருந்துகிறோம்.

---

குடிமதிப்பு_சென்ற 10வ இரவு குடிசனமதிப்பு எடுக்கப்பட்டது. தொகைவிபரம் மறுபத்திரிகை புறப்படுமுன் வெளிப்படுமென நம்புகிறோம்.

---

மெஸ், மு. கவிரியேற்பிள்ளை – நம்மூரைச் செனனஸ்தானமாயுடையரும் திரிகோணமலையில் நம்பத்திர முகாமைக்காரனுயிருந்த மெஸ். அ. இன்னாசித்தம்பியவர்களின் சம்பந்தியும் உண்மை அடக்கம் பொறுதி முதலிய சுகுணலட்சணமுடையருமான இவர் திரிகோணமலையில் காலஞ்சென்ற துக்கசங்கதி அதுராசபுரத்தால்வந்தது. திரிகோணமலையிலுள்ள அவரினத்தவர்கள் நேவல்யாட்டு முதலியவைகளின் பிழைப்புக்குன்றியதால் அங்கிருந்து வலசைவாங்கிவிட்டார்கள்போலும்!

திருமங்கிலியம்—கொழும்பு உவாக்கர்கொம்பனியில் உத்தியோகத்திலமர்ந்திருப்பவரான ஸ்ரீ W. V. நல்லதம்பியவர்கட்கும், தெல்லிப்பழையைச் சென்னஸ்தானமாயக்கொண்டவரும் மானிப்பாய் அமரிக்கன்மிஷன்தேவாலயகுருவருமான கனம். அங்கிறதெல் போதகரின் புத்திரி மிஸ், கிறேஸ் தங்கம்மாவுக்கும் சென்ற 15உ புதன்கிழமை மானிப்பாய்த் தேவாலயத்தில் மெய்விவாகபந்தனம் நிறைவேறிற்று. மணமகனின் சாந்தகுணமே இப்புதுயகுடும்பத்திற்கு நீடிய சமாதானமளிக்குமென்பதில் சந்தேகமில்லை, இவர்கள் நீடியஆயுசுபெற்று மனமகிழ்ச்சியுடன்வாழத் தேவன் கிருபைசெய்வாராக. (கடி)

வேப்பங்கொட்டை—இனிமேல் வேப்பங்கொட்டைக்கும் விலைவரப்போகிறது. மன்னெய்வாவுடன் அனேகவிடங்களில் வேப்பங்கொட்டையைப் பொறுக்காதும்விட்டுவிட்டார்கள். இதன் எண்ணெய் சாயமேற்றுதற்குமுக்கியமானது. இதை எதற்காகவோ சீமையிலுள்ள ஓர்கம்பெனியார் அழைப்பிக்கவிரும்பி கமதரசாட்சியாரை எக்காலத்தில் இதை அதிகமாய்வாங்கலாமென்று கேட்டிருக்கிறார்களாம்.

அப்புக்காத்து மெஸ். C. K. தம்பி—யாழ்ப்பாணம் தெல்லிப்பழைவாசராய், சிலமாசங்களுக்குமுன் இறங்கூனில் நடத்தப்பட்ட அப்புக்காத்துக்குரிய கடைசிப்பரீட்சையில் சித்தியுற்றவரும் கந்தரோடை அங்கிலோவித்தியாசாலைப் பிரதமாசிரியர் மெஸ். T. K. பொன்னையாவவர்களின் சோதரனுமான இவர்; சென்ற தைமீ 10உ யன்று இறங்கூனிலே அரசினரால அப்புக்காத்துமாருக்குக் கொடுக்கப்படும் தத்துவச் சட்டையைப்பெற்றுத் தம் அரியமுயற்சியிற் பிரவேசித்துக் கடமைபார்த்துவருகிறாரென்பதையறிந்து மிக்க சந்தோஷமடைந்தேம். இவர் அதிசுபுத்திசாமார்த்திய நற்குணமுடைய ஓர் உத்தமவாலிபன். இவரது ஊக்கமும் விடாமுயற்சியும் கல்வித்திறமையுமே மூன்றுவருஷப்படிப்பில் இந்நிலையில் கொண்டுவந்ததென்பது தெள்ளிதில் விளங்கும். மேற்படி தம்பி என்ஞான்றும் தம்முயற்சியில் துலங்கிவரவேண்டுமென விரும்புகிறேம். (அனு)

## நோய்திர வுபாயம்.

அநேக ரோகங்களுக்கு மூத்திர உப்பு விஷமே (யூரிக் ஆஸிட் பாய்ஸன்) காரணம். தூர்ப்பலமாயும், ரோகம் முதிர்ந்தும் உள்ள மூத்திரப்பை தான் செய்யவேண்டியபடி செய்யாமல், ரத்தத்திலிருந்து மூத்திரத்தை வடிகட்டாதது ஆகிறது. உடம்பு முழுதும் சுகமாயிருக்கிறதற்கு முக்கியமான காரியம் மூத்திர விஷம் ரத்தத்திலிருந்து பிரிவதுதான்.

பலமில்லாமலும், ரோகம் நிறைந்தும் இருக்கிற மூத்திரப்பையின் லக்ஷணங் கேளுங்கள்:—முதுகுநோய், தூக்கம் பிடியாதிருத்தல், ஜலம் கொஞ்சமா யிறங்குவது, மூத்திரம் நிறமாறுதல், மூத்திரத்திலிருந்து புகை கிளம்புவது, எப்போதும் தாகம், ஆயாசம், பலவீனமான இருதயம், தலைநோவு; தைரியமில்லாமை, கண் பார்வையின் மந்தம், தலைச்சுற்று, கீல்களும், சதைகளும் புண்ணாகி அசைக்க முடியாமற் போவது, மறதி, சாதாரண பலவீனம் முதலானவை. இந்த லக்ஷணங்கள் உண்டானபோது, அசட்டை செய்துவிட்டால், கீழே சொல்லும் ரோகங்கள் தப்பாமல் உண்டாகும். மூத்திர ரோகம், திமிர்வாயு, மகோதரம், பகு மூத்திர ரோகம் முதலானவைகளும், ஸ்திரீரோகமென்று தப்பாக எண்ணிக்கொள்ளும் ரோகங்களும்.

(டோண்ஸ் பாக்-ஏக் கிட்னி பில்ஸ்) டோன் அவர்களுடைய முதுகுநோய் மூத்திரப்பை ரோக மாத்திரைகள், மூத்திரப்பையிலும், மூத்திர அவயவங்களிலும் புகுந்து, மூத்திர விஷத்தை ரத்தத்திலிருந்து பிரிக்கும். அது நடந்தால், சரீரசுகம் தப்பாமல உண்டாகும். சுகமாய் இருக்கவேண்டுமானல் மூத்திரப்பை ரோக மடையாமல் வைத்துக்கொள்ளவேண்டும். மூத்திரப்பையை ரோகமடையாமல் காத்துக்கொள் வதற்கு ஏற்ற மருந்து (டோன்ஸ் பாக்-ஏக் கிட்னி பில்ஸ்) டோன் அவர்களுடைய முதுகு நோய் மூத்திரப்பை ரோகமாத்திரைகளே.




| | | | |
|---|---|---|---|
| ஒரு புட்டி விலை, ரூபா. .... | 2 | 0 | 0 |
| 6 புட்டியின் விலை, ரூபா. .... | 10 | 8 | 0 |

இவை, சீமை மருந்து வியாபாரிகள் எல்லாரிடத்திலும், சென்னையில் ஏஜண்ட் ஆனடப்பிளியு. ஏச். ஹமல்லர் துரையவரிடத்திலும், கிடைக்கும்.

தபாற்சோரம்—இலங்கைக்குள் நாம் புஸ்தகப்பார்சலாயனுப்பிவைத்தசிலபார்சல்கள்போய்ச் சேரவில்லையாம். இந்தியபுஸ்தகப்பார்சலுக்குயாத்திரம்பயந்து றிசிஸ்றர்செய்துவந்தோம். இனி இலங்கைப்பார்சலும் றிஜிஸ்றர்செய்தனுப்பவேண்டியிருக்கிறது. "பலகாட்டிருடன் ஒருநாளகப்படுவான்" ஆதலால் தபாற்றிருடர் விழிப்பாயிருப்பார்களாக.

நல்லாகப்பெலப்படுத்தப்பட்ட சரீரத்தையுடைய ஒருவர் கொள்ளைநோய், வைசூரி, பேதி, சுவாசப்பை நோய்கள் முதலியவைகளைப்பற்றிப் பயப்படத்தேவையில்லை, பெலவீனமும் பழுதுபட்ட சரீரத்தையுமுடையவர்களையே நோய் எப்பொழுதும் பீடிக்கும்.

### ஸ்கொற் இமல்ஷன்

என்னும் உணவுமருந்து சரீரத்தின் பெலவீனமான பகுதிகளைப் பெலப்படுத்தி எவ்விதநோயும் அணுகாவண்ணம் சரீரத்தைப் பாதுகாக்கின்றன.



கையால் தொடப்படாது

எல்லாமருந்து வியாபாரிகளிடத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

எப்பொழுதும் இந்த ஸ்கொற் மீன்பிடிகாரனின் அடையாளமிட்ட 'Eulsion' இலச்சினைப் பார்த்து வாங்குங்கள்

SCOTT & BOWNE LTD
MANUFACTURING CHEMIST
ENGLAND LONON

## இலங்கை

நகரசங்கப்பிரதிநிதி—கொழும்பு நகரசங்கத்தில் சென்ற் போலஉவாட்டுக்குப் பிரதிநிதியாயிருந்த மிஸ்றர் எச். திருவிளங்கம் பிறக்றர் வேலையாவிளைப்பாறுகிறார். அவரிடத்திற்கு மிஸ்றர் அ. மகாதேவபரிஸ்தரும், டக்றர் E.V. ரத்தினமும், மிஸ்றர் E.T. ரத்தினம் அப்புக்காத்தும் நியமனம்பெற எத்தனக்கின்றனர். இம்மூன்றுவாலிபரின் குணகுணங்களையும் யுத்திவல்லபத்தையும் இங்குநாமெடுத்துப்பேசத் தேவையில்லை. ஆனல் ஒன்றுமாத்திரம் நாம் சொல்லலாம், Mr. E. T. ரத்தினமென்பவரே சென்ற் போல்உவாட்டுக்குச் சமீபமாய்ச் சீவிப்பவராதலாலும் மாளிகைகளிற் சீவிப்பவர்களைவிட அதிகம் சனங்களுடன்புளங்கி அவர்களுடன் அனுதாபப்படக்கூடியநிலையிலிருக்கிறாரென்பது எமதுதுணிபு. (கடி)

Mr. E. T. ரத்தினம் என்பவரும் நல்லொழுக்கமும் நற்பழக்கமுஞ் சுறுசுறுப்புமுடையரென்பதை நாமறிவோம். ச.போ.ப.

வாக்குச்சுதந்தரம்பெற்றவர்கள்—சட்டநிருபணசபை அங்கத்தவரைத்தெரிவதற்கு வாக்குக்கொடுக்கும் உரித்துப்பெற்றவர்கள்நாமம் 13உ.க் கசேற்பத்திரிகையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அதில் கொழும்பு கண்டி காலியிலுள்ள ஐரோப்பியவாக்குச்சுதந்தரர்தொகை 354. கொழும்பு கண்டி மாத்தளை நுவரெலியா யாழ்ப்பாணம் மன்னார் காலி மட்டுக்களப்பு குருநாகல் புத்தளம் சலாபம் வதுளை இரத்தினபுரி கேகாலையிலுள்ள தோட்டத்துரைமாரவருப்பைச்சேர்ந்த ஐரோப்பிய வாக்குச்சுதந்தரர் தொகை 1033. பலஇடங்களிலுமுள்ள பேர்க்கரின்தொகை 2017. இலங்கைவாசிகளின் பிரதிநிதியைத் தெரிவுசெய்யச்சுதந்தரம்பெற்ற கற்றவர்கள்தொகை 2984. இவருள் யாழ்ப்பாணத்தில் 540 பேரும், கொழும்பில் 1345 பேரும், களுத்துறையில் 129 பேரும், கண்டியில் 246 பேரும், மாத்தளையில் 36 பேரும், நுவரெலியாவில் 25 பேரும், மன்னாரில் 16 பேரும், முல்லைத்தீவில் 23 பேரும், காலியில் 128 பேரும், மாத்துறையில் 46 பேரும், அம்பாந்தோட்டையில் 21 பேரும், மட்டுக்களப்பில் 85 பேரும், திரிகோணமலையில் 31 பேரும், குருநாகலில் 58 பேரும், புத்தளத்தில் 35 பேரும், சலாபத்தில் 64 பேரும், அனுராசபுரத்தில் 37 பேரும், வதுளையில் 34 பேரும், இரத்தினபுரியில் 47 பேரும், கேகாலையில் 38 பேரும் உளர்.

பிரக்கிராசிவேலையாலேநீக்குப்படல்—வழக்குக்குவந்து தம்மைஏற்படுத்திய ஒருவருடையகாசு 1500 ரூபாவுக்கு நம்பிக்கைத்துரோகஞ் செய்தமையாலே கொழும்பு டிஸ்திறிக்கோட்டிலே ஆறுமாசமறியலுக்கும் 500 ரூபா பணத்தெண்டத்துக்கும் விதிக்கப்பட்ட பிரக்கிராசியார் சால்கடோ என்பவரின் நாமத்தைச் சுப்பிரீங்கோட்டுஅரசர்மூவருங்கூடி ஆலோசித்துத் தாணிமாரின் இடாப்பிலிருந் தெடுத்துவிட்டனர்.

உதாரகொடை—எட்வேட் அரசரின் ஞாபகமாகக் கட்டப்படவிருக்கும் சயரோகர்வைத்தியசாலைக்குப் பாணந்துறையிலிருக்கின்ற மெஸ். பி. டெரேமியாஸ டயஸ் என்பவர் 10500 ரூபாகொடுத்ததுமன்றி இன்னும்தேவையானல பின்னும் பணமுதவுவதாகச் சொல்லியிருக்கிறாராம்.

மறியற்காரர் ஒளித்தோடல்—மட்டுக்களப்பில் சின்னமுத்தாலேவருந்திய நாலுமறியற்காரரை வைத்தியசாலைப் பரிசரிப்புக்கு அனுப்பிவைக்க அவர்களில் இருவர் அங்கிருந்து ஓடிவிட்டார்கள். அவர்களைப்பிடித்துக்கொடுக்கிறவர்களுக்கு 50 ரூபாஉபகாரங்கொடுக்கபடுமென்று அரசாட்சியார் வளம்பரஞ்செய்திருக்கின்றார்.

புதியகிரேட்டநீதியரசர்—இலங்கையின் எற்றேணிஜெனறலாகிய சங். லாசெலஸ் சிலகாலத்துக்குச் சிரேட்ட நீதியரசர்வேலைபார்க்கும்படி நியமிக்கப்பட்டமையால் சென்றமீ 27உ சத்தியஞ்செய்து வேலையை ஒப்புக்கொண்டு நடத்திவருகிறார்.

## மாதா கேள்விப்பட்டதென்ன.

லிங்கைநகரிலே மார்க்காம்தெருவிலே வசிக்கின்ற மிஸ். மேரி யோவிரேஞ் என்பவள் சொல்வது. நான் முற்றாக உருக்குலைந்துகொண்டு போகும்போது வளருகிற பிள்ளைகளுக்கு டக்டர் உவில்லியம்ஸ் பிங்பில்ஸ் நல்லதென்று என்னுடைய மாதா சொல்லக்கேட்டாள். என்மட்டிலே இக்குளிகைகள் எவ்வளவு ஆச்சரியத்தைச் செய்தனவென்பதை அறியவேண்டுமானல் நம்முடைய குடும்பத்தில் உள்ளாரிலே யாரையாவது கேட்டாலுஞ் சொல்வார்.

சிலவருடங்களின்முன்னே என்னுடைய தேககம் பாடாகவிழுந்துபோயிற்று. முன் எனக்கிருந்த விசேஷமுயற்சிக்குப்பதிலாக என்னிலே சோர்வான தளர்ந்த உணர்ச்சி குடிகொண்டது. நாள்முழுதும் படுத்திருப்பதுதான் எனக்கு விருப்பம், எழும்பி நடமாடுவதற்கு என்னில்பெலனில்லையென்பதாகத்தோற்றியது. பித்தத்தலையிடியும் சகிக்கக்கூடாத முதுகுவலியும் என்றுமிருந்துவந்தது. எனக்குப் பசியோ இல்லை, வழக்கமான போசனந்தானும் நெஞ்சுக்கும் தோளுக்குமிடையே பெரிய வருத்தத்தை யுண்டாக்கும். பால்முதலிய நொய்யஉணவுகள்தாமும எனக்கு இணங்காதுபோயின.

நான் படிப்படிவசக்கெட்டு என்புருவாகி மந்தபார்வையும் இருதயத்தின் பக்கத்திலே நோவுமுடையவளுனேன். ஒரு சிறுமுயற்சிசெய்தாலும் இளைத்துப்போவேன். நாளுக்குநாள் நான் பெலன் குன்றிக்குன்றிவந்தேன்.

பெலன்தரும் மருந்தென்று மருந்துக்குமேலே மருந்து சாப்பிட்டுவந்தேன். அவைகளாலே எனக்கு ஒருநயமும் வந்ததில்லை. எந்தமருந்தாவது எனக்கு ஒரு சிறுசகாயமாவது செய்ததில்லை. நான் உருக்குலைந்துகொண்டுபோனேன். அப்போது என்னுடையமாதா எனக்கென்று டக்டர் உவில்லியம்ஸ் பிங்பில்ஸ் வாங்கினுள்.

நான் அம்மருந்தைச் சாப்பிடத்தொடங்கினேன். அதனலே நயம்வருமென்ற நம்பிக்கை எனக் கிருக்கவில்லை. என்றாலும் மூன்றுபோத்தல்மருந்து சாப்பிட்டுமுடியுமுனகருநல்லபசிவரத்தொடங்கியது. இரவில் நன்றாக நித்திரைகொண்டு காலையில் நல்ல சோகரியமாக எழும்புவேன்.



மிஸ். எம். யோவிரேஞ்.

இதனலே நான் நல்லதைரியங்கொண்டு அந்தமருந்தை விடாது நெடுகச்சாப்பிட்டுவர விரைவிலே என் தலையிடிநீங்கியது. நரம்புகள் துடிப்புக்கொண்டன. பசியதிகமாயிற்று. சாப்பாடு நல்ல சமிபாட்டிலேபோயிற்று. நான் முன்னிழந்த சதைகளையெல்லாம் மறுபடிபெற்றபின்னர் டக்டர் உவில்லியம்ஸ் பிங்பில்ஸ் எனக்குப் பூரணசுகம் கொடுத்ததென்பதை நன்கறிந்து அதன்மேலேதான் மருந்தை நிறுத்திக்கொண்டேன்.

வெளிறினவர்களுக்காக ஆக்கப்பட்ட டக்டர் உவில்லியம்ஸ் உடைய குளிகைகள் அறியப்பட்ட சஞ்சீவி மருந்துகளுள்ளே தலைமையானது. இக்குளிகைகள் இரத்தத்தைச் சுத்தப்பண்ணிச் செளிப்பிக்கின்றன. இரத்தத்தின் மூலமாய் தேகத்தின் சகலபகுதிகளுக்கும் நல்லசுகத்தைக் கொடுக்கின்றன. இதனுற் சொஸ்தம்பெற்ற பலருடைய நற்சாட்சிப்பத்திரங்கள் டக்டர் உவில்லியம்ஸ் உடைய குளிகைகள் செமியாக் குணத்துக்கும், ஈரல்நோய்க்கும், தலையிடிக்கும், தோல்வியாதிகளுக்கும், பருக்களுக்கும், புண்களுக்கும், வாதத்துக்கும், திமிர்வாதத்துக்கும், வீக்கத்துக்கும், காய்ச்சலின்பின்வரும்பெறுபேறுகளுக்கும், வயிற்றுளைவுக்கும், குலைப்பன் காய்ச்சலுக்கும், விசேஷமாய் இளவயசுதொடங்கி நடுப்பராயம்மட்டும் பெண்பாலார்படும் வருத்தங்களுக்கும் தக்கமருந்தெனக்கூறுகின்றன. இலங்கையிலே மருந்துவிலைப்படும் சாய்ப்புகளெல்லாவற்றிலும் இம்மருந்தையும் வாங்கலாம். விலை போத்தலொன்று 2 ரூபா. ஆறுபோத்தல் 11 ரூபா.

சர்மனிய இளவரசர் — முடிக்குரிய இவ்விளவரசர் இம்மாசம் 1 உ பூரணசவுக்கியத்தோடு சவேஸ்பட்டணம்போய்ச் சேர்ந்தனர்.

கப்பல் தடைசெய்யப்படல் -- கிறிஸ்மஸ் தீவில் 13 யப்பானியர்களை இறக்கிவிடும்படி உத்தரவு பெற்று அவ்விடத்திற்குச்சென்ற தொகோமாரு என்னும் யப்பானிய பாய்க்கப்பலை, பிரித்தானியர்க்குரிய பீரங்கிக்கப்பல் அங்ஙனஞ்செய்யாதபடி தடுத்துவிட்டது.

அக்கினி அபாயம்—ருசியாவின் கொவ்கிரோத் மாகாணத்தில் பயோஸ்கோப் என்னும் உயிர்ச்சித்திரப் படக்காட்சி காண்பிக்குந்தருணத்திலுண்டான தீ மோசத்தால் சிறு குழந்தைகளும் ஆடவர்களுமாக 90 பேர் அக்கினிக்கிரையாயினர். 40 பேர் காயப்பட்டார்கள்.

மொரோக்கோவில்கலகம் —மொரோக்கோவின் தலைநகரான பெஷபட்டணத்தைக் கோத்திரக்கூட்டத்தார் சூழ்ந்துகலகம் விளைத்தாரெனத் தஞ்சிரிலிருந்து செய்தியெட்டியது, கலக வீரர்களாகிய கோத்திரக்கூட்டத்தார் சுல்தானின் படையாயுதசாலைகளை அழித்துவிட்டனர். இதனால் பீரங்கிப்படையும் ஓர்தொகையானவர்களுங் கொல்லப்பட்டுங் காயப்பட்டும்போயினர்.

ருசியபெண்களின்விவசாயக்கல்வி—ருசியாவிலே விவசாயஞ்செய்யும்முறையை ஸ்திரிபாலார்க்குக் கற்றுக்கொடுக்கும்பொருட்டாய் அரசாட்சியாரால்ஓர் வித்தியாசாலை திறக்கப்பட்டிருக்கிறது. இப்போது அப்பாடசாலையில் 320 பெண்கள் கல்விகற்கின்றனர். பரீட்சையில்தேறியபின்பு அப்பெண்களுக்குத் துரைத்தனத்தாரால் உத்தியோகங்கள் கொடுக்கப்படுமாம்.

மரங்களுக்குமலாம்பூசுதல்—இரும்பு செம்பு வெண்கலம் ஆகிய லோகங்களாற்செய்யப்படும் சாமான்களுக்கே மலாம்பூசும் வழக்கம் இதுவரையில் கையாட்சிசெய்யப்பட்டுவந்தது. இப்போது ஆரிச்சிலிருக்கும் இரசாயனசாஸ்திரிஒருவர் மரங்களுக்கு மலாம்பூசும்வித்தையைக் கண்டுபிடித்திருக்கிறாராம். மலாம்பூசவேண்டியசாமானை இரும்பு செம்பு வெள்ளி முதலியவற்றை நீராவியாக்கி அவற்றின் ஆவி மரத்தின்மேற்படக் குளிரும்படிசெய்து மலாம்பூசும் இயந்திரத்தில் அதனைக்காட்டினால் மெல்லிதாக மலாம்பரவுமாம்.

டில்லி மகுடாபிஷேகம்—டில்லிதரக் கிரீடதாரணைபம் வருகிற மார்கழிமீ 7உ ஆரம்பமாகி 16உ வரையில் முடிவுறுமாம்.

வெள்ளையானை—சியராச்சியத்தில் ராதெங்கக்கரையையடுத்த வனாந்தரத்தில் ௯ அடிஉயரமுள்ள ஒரு வெள்ளையானைக்குட்டியைப் பிடித்திருக்கிறார்கள்.

கரோலைன்தீவுகள்—இங்கே ஐரோப்பியரைக் கொலைசெய்துவந்த கோத்திரத்தார் முழுப்பேரும் பிடிக்கப்பட்டுக் கொலைசெய்ததாகக் காணப்பட்ட 15 பேர் கோட்மாஷல்விசாரணைக்குப்பின் சுட்டுக் கொல்லப்பட்டனர். 426 பேர் ஊரைவிட்டுத் துரத்தப்பட்டார்கள்.

மகுடதாரணப் பாவனைவண்டி—மகுடதாரணத்துக்கு அரசருக் குபயோகித்தற்காயிருந்த வண்டி கொட்டிக்காம் காருகசாலையில் சென்றமீ 9உ நெருப்பால் தகிக்கப்பட்டது. இத்தவண்டி 200 வருடங்களின்முன் செய்யப்பட்டது.

கமக்காரர்மனைவாளிகள்—கனடாவிலிருக்குங் கமக்காரர்களுக்கு மனைவியராக ஐம்பதினாயிரம்பெண்கள் தேவையென்பதாய் வெளிப்படுத்திய விளம்பரமேகாரணமாய் லோர்ட் ஷைருதிக்கொனைவின் பரதேசப்பிரவேசகர் ஆபீசில் ஏராளமானவிண்ணப்பங்கள் கிடைத்தன. ஆனால் வீட்டுவேலைதெரிந்த பெண்கள்மாத்திரந் தெரியப்பட்டுக் கனடாவுக் கனுப்பப்பட்டார்கள்.

கள்ளவேடம்—ருசியாவைச்சேர்ந்த மெஸ்கோவென்னும் பட்டணத்தில் இரண்டு கள்ளவேடந்தரித்த பிச்சைக்காரர்கள் புகுந்தாகளென்றும் அவர்களில் ஒருவன் கௌண்ட் டொல்ஸ்டோவின் சாயலையுடையவனென்றும் அவன்தானே கௌண்ட் டொல்ஸ்டோ என்றும் டொல்ஸ்டோ செத்ததென்பது முழுப்பொய்யென்றும், தான் அவ்வூரிலிருந்து துரத்தப்பட்டானென்றும் சொல்லிப் பெருந்தொகையான பணத்தை அந்த ஊரவர்களிடத்தும்பெற்றுத் திரும்பினார்களென்றும் அவர்கள் இப்போதுஎங்கிருக்கிறார்களென்பது தெரியவில்லையென்றும் சென்பீற்றேஷ்பேர்க்கிலிருந்துவந்தசமாச்சாரங்கூறுகின்றது.

இரண்டிலட்ச ரூபாயுள்ள பிச்சைக்காரன்—ரோமேனியாவின் கசாக்காவில்வாழ்ந்த ஓர் கிரேக்கசாதிப் பிச்சைக்காரனின் பழைய தலைப்பாகையில் இரண்டிலட்சரூபா பெறுமதியான நோட்டுகளிருக்க அவன் மனைவி கண்டெடுத்தாள். பிச்சைக்காரனை விவாகஞ்செய்துகொண்டநாள்முதல் தனது புருஷன் வறியவனென்றே அப்பெண்நினைத்திருந்தாள். வாழ்நாளெல்லாந் தனது பத்தாவுடனே வறுமைப்பிணியை யனுபவித்துவந்த இம்மாது ஈற்றில் வறுமையினின்று ஈடேறும் பக்குவகாலம் வந்தெய்தியது நற்காலபலமே.

நீச்சில்தேர்ந்தஸ்திரி—லண்டனைச்சேர்ந்த டார்லிங்டனில் 18 வயதுள்ள ஓர் ஐரோப்பியமாது ஒன்பதுமணிநேரத்தில் 9 மைல்தூரம் நீந்திப்போயினள். தன்னேறு நீந்தக்கூடிய தைரியம்பெற்ற ஸ்திரி எவளாவது உலகத்திலிருந்தால் வரலாமெனக்கேட்டிருக்கிறாளாம்.

சர்மன்சக்கிரவர்த்தி—இருபத்தைந்துமைல்நீளமும் அறுபத்தைந்தடி அகலமுங்கொண்ட ஓர்கால்வாய் வெட்டுவித்திருக்கிறார். இதில் 50 பாலங்களுண்டு. செலவு 20 லட்சம்பவுண். இக்கால்வாய்வழியாய்ப் பெரியகப்பல் போக்குவரவுசெய்யக்கூடும்.

அரசரை உபசரித்தல் — ஐந்தாவது யோர்ஜ் அரசரை வரவேற்றுச் சன்மானித்தற் பொருட்டாய் மூப்பதினாயிரம் ரூபாய் செலவிடுதற்குக் கல்கத்தா நகரசங்கத்தார் செலவிடத் தீர்மானித்திருக்கிறார்கள்.

## கடிதம்.

### நாகர்கோவில்.

காலநிலை—வெயிலதிகம். மழைபொழிவதற்குரிய அறிகுறிகளைக் காணோம். கிருஷிகர் நெற்களை வெளிவிடாமல் கல்விலைக்கு விற்கும்படி கட்டிவைக்கிறார்கள். இப்போது ஒருகோட்டை நெல் 40 பணமாயிருந்தும் இதிலும் கூடுதல் கிடைக்கவேணுமென்ற நோக்கமாயிருக்கிறது. பண்டம்பாடி விலைகள் ஏற்றமாகவேயிருக்கிறது.

கைத்தொழில் அபிவிர்த்தி — வைதிக விஷயங்களில் அதிகம் சிரமமெடுத்துவருகின்ற ஸ்தலத்து இரட்சணியசேனையார் லௌகீக காரியங்களிலும் மிக்க கவலையுடையவர்களாயிருக்கிறார்கள். பெண்களை யுத்தாப்பியாசமடத்தில் நால் பின்னல்வேலைகள் முதலிய வேலைகள் கைக்கொண்டு முன் நடத்தப்பட்டு வருகிறது.

இரட்டைக்கன்றுகள்—இவ்வூரையடுத்த ஆசாரிகுளத்தில் ஓர்பசு ஒரேசூலில் இரண்டு பசுக்கன்றுகளை ஈன்றிருக்கிறது. இது ஒரு விசேஷமானதால் அநேகர் இதைப்போய்ப் பார்த்து ஆனந்திக்கிறார்கள். இப்பசு ஈன்றதும் கன்றுகள் இதுவரை கல்ஷேமமாயிருக்கிறது. இதுவும் ஓர் கலிகாலவிந்தையே!

ஓர்புலி—சென்றவாரமத்தியில் ஓர்புலி வடகாட்டினின்றுபுறப்பட்டு இப்பட்டினத்தட்புகுந்து ஓர்இரவு ஓர் வீட்டில்கிடந்த இரண்டு பசுக்கன்றுகளைப்பிடித்து ஒன்றின் இரத்தத்தைக்குடித்தும் மற்றதின் ஈரல் குடை இறைச்சி முதலியவைகளைத் தின்று பிணமாகப்போட்டுவிட்டு அருகாமையிலிருந்த ஓர் பாழும் ஓடையில் சுகமாய் நித்திரைசெய்துகொண்டிருந்தது. இது அவ்விடத்திற்கிடப்பதாகச் கேள்விப்பட்ட வேட்டைக்காரர்கள் வேட்டைவாய்த்ததென்று அதற்குவேண்டிய எத்தனத்துடன் வேட்டைநாய் வெடி தடிமுதலிய காரியாதிகளுடன் புறப்பட்டுப் புலிகிடந்தஇடத்தின் அருகேநின்றுகொண்டு புலியைச்சலைக்க எத்தனிக்கையில் புலி பூனைபொறியாக உயிர்தப்பிக்கொண்டது. மறுநாள் புலியானது இவ்விடம்விட்டு ஐந்துமைலுக்கப்பாலிருக்கும் வழுசன்பாறை என்னும் பாறைஇடுக்கில் கிடப்பதாக அவ்வூரார்தெரிவிக்கவே, வேட்டைக்காரர் அதன்படியாகப் போய்ப் புலிகிடந்தஇடத்தில் மூன்று வெடிவைத்துச் சுட்டுப் படுகாயப்படுத்தியும் அது மூர்க்கங்கொண்டு பின்னும்ஓடி அருகாமையிலிருந்த வயலுக்குள்வீழ்ந்து உயிர்துறந்தது. பின்பு இதை எடுத்துப் பல்லக்கிலேற்றி அதின்மேல் புலியை ரூபமாகத் தூக்கிவைத்து இவ்வூரார் எல்லாருங் காணும்படியாகத் தெருவழியாகக் கொண்டு சென்றார்கள். மேலும் இதோடுசேர்ந்த ஆண்புலியொன்றை இவ்வூர்க்குச்சமீபமாயிருக்குங் காடுகளில் சனங்கள் காண்கிறதாகவும் அதையும் உயிர்காய்க்கிறதற்குப் பலவழிவகைகள்செய்யப்படுகிறது. மேற்படி புலியைக்கொன்ற ஓர் மகமதியவாலிபனுக்கு அநேகம் சனங்களால் நல்ல சன்மானம் அளிக்கப்பட்டது.

ஓர் வந்தனோபசாரம்—சம்நேயர்கள் அறிந்தபிரகாரம் இங்கிலாந்துக்கு எகியிருந்த கனம் ஆலன்ஐயரவர்கள் சுகத்துடன் கடந்தவாரம் செவ்வாய்க்கிழமை அருணோதயத்தில் இவ்விடம் வந்துசேர்ந்தார்கள். அவரை உபசரிப்பதற்காக ஸ்தலத்துக் கிறீஸ்தவர்கள் மணிக்கோபுரத்துக்குமுன்பாகப் பவனிசென்று பாட்டு பறைகளுடன் ஐயர் அவர்களை எதிரேற்று ஓர் வந்தனோபசாரப்பத்திரமும் வாசிக்கப்பட்டது. பின்பு அவரைக் குதிரைக்காத்தையிலேற்றி இரண்டுமைலுக்கப்பாலிருக்கும் பெல்பீல்டுபோய்ச் சேர்த்தார்கள். சேர்ந்ததும், தயாராயிருந்த வாணவேடிக்கை கம்பம்முதலிய ஆவி தீபலங்காரமும் பார்ப்போருக்குச் சந்தோஷத்தைக்கொடுத்தது. கடைசியாக ஐயர்அவர்கள் தனக்கு இவ்வளவு மரியாதையான உபசாரணைசெய்ததைக்குறித்தும் இன்னும் விசேஷமாய் தவர்கண்ட விஷயங்களைக்குறித்தும் மிக ஆவலுடன் பேசினார்கள். கூட்டம் உடனே கலைந்தது. V. G.

ஷங்காய்

# சிவியவிமாக்கொம்பனி.

(ஒரு பிரித்தானிய கொம்பனி.)

இக்கொம்பனியின் கிளைக்கொம்பனியொன்று கொழும்பிலே சுப்பிரீங்கோட்டுப் பிறக்தர் மெஸ், சாள்ஸ் பீரிஸ், டக்தர் டேவிட் நக்லூட், வர்த்தகர் மெஸ், வயிரமுத்து ஆகிய இவர்களின் நன்மதிகொண்டு அவர்களின் பார்வையின்கீழ் நடைபெறுகிறது.

எந்தவகுப்புச் சுதேசிகளு மேற்றுக்கொள்ளப்படுவார்கள்.

இந்தக் கொம்பனியின் வரும்படி முதல் ஆதியவைகளை எழுதி அறிந்துகொள்ளலாம்

F. R. சந்திரசேகரர்,
யாழ்ப்பாணம் முகாமைக்காரன்
சாம் சோலமன்,
மானேசர்.
கொழும்பு.


# STAMERENOTICE.



*Ceylon Steamship Coy Ltd:*

இலங்கைப் புகைக்கப்பற் கொம்பனியாரின் கப்பல்கள் பின் வருந்தேதிகளில் மண்டை தீவிலிருந்து கொழும்புக்குப் போகவிருக்கின்றன

பரித்தித்துறைவழியாய்
லேடிமக்கலம் 1911ஞு
பங்குனிமீ 23உ வியாழக்கிழமை
பாம்பன்வழியாய்
லேடிபிளேக் 1911ஞு
பங்குனி மீ 20 உ திங்கட்கிழமை

இக்கப்பல்கள் வழியாய்ச் சாமான்கள் அழைப்பிப்போர் பறிக்கப்பட்டவுடனே விலடி அல்லது தந்திகொடுத்துத் தங்கள் சாமானை ஒப்புக்கொள்ளும்படி கேட்கப்படுகிறார்கள்

Wm Mather & Son
Agents

# Jaffna Commercial Corporation Ltd.

யாழ்ப்பாண வியாபாரசமுதாயம்

வங்கிக்கருகிலிருக்கும் எங்கள் புடவைச்சாப்பிலே யாழ்ப்பாணத்துக்கேற்ற பலவிதமான

காரிக்கன், மல், சித்தைச் சீலைகளும்
வடதேசத்திலிருந்தழைப்பிக்கப்பட்ட
பெனாரிஸ், கஸ்மீயர்ச் சேலைகளும்
வெள்ளைச் சருகைச்சேலைகளும்,
பலதினுசான பொதுவான
சேலைகளும், சருகைச் சால்வைகளும்
கம்பிச்சால்வைகளும்
மலிவானவிலைக்கு விற்கப்படும்.
இன்னும்யாழ்ப்பாணத்திற் பாவிப்புக்கேற்ற மாதிரியான



மண்வெட்டிகள், பிக்கான்கள்.
புற்றுவெட்டிகள், காட்டுக் கத்திகளும்
இவ்விடம்விற்பனவுக்கிருக்கின்றன

WM MATHER
Managing Director

# CALICUT TILES.

# கலிற்கற் ஓடுகள்.

கலிக்கற்ஓடுகளே மற்றெல்லா ஓடுகளைப்பார்க்கிலும் விசேஷமுள்ளவை என்பது நெடுங்காலமாய் ஒப்புக்கொள்ளப்பட்ட காரியம். இவைகள் மிகவும் பெலனுள்ளவைகளும் லேசானவைகளுமன்றி மற்றெல்லாவித ஓடுகளைப்பார்க்கிலும் தண்ணீர் இழுப்பதில் மிகக் குறைவுள்ளவைகளாயுமிருக்கின்றன.

சென்னபட்டினத்திலுள்ள ஓர் பண்டிதராற்செய்யப்பட்ட சோதனையிலும் கலிக்கற் ஓடுகளே விசேஷமுள்ளவைகளாய்க் காணப்பட்டன. அரசாட்சியாரும் தங்கள் கட்டிடங்களிற் கலிக்கற் ஓடுகளே போடுவிக்கின்றனர்.

மலிவான ஓடுகள் தேவைப்படுவோருக்காக முன்னிருந்த முதலாம இரண்டாந்தரங்களைவிட மூன்றாந்தர ஓடுகளும் இவ்வருடம்அழைப்பித்திருக்கிறோம் வந்துபார்க்கவும்.

| | | | | |
|---|---|---|---|---|
| விலைவிபரம். | 1-ந்தரம் | ஆயிரம் | 65 | ரூபா |
| | 2-ந்தரம் | ஆயிரம் | 60 | ரூபா |
| | 3-ந்தரம் | ஆயிரம் | 45 | ரூபா |

Wm. Mather & Sons
Agents.


Printed and published By S. Tambimuttoopillai a his Achuvaly Gnanapragasa Yanthira Office Achuvely Putteor Jaffna